தேனியில் சிறைக் கைதிகள் தப்பியதற்கு அரசின் அலட்சியமே காரணம்!

அமைச்சர் நிர்மல் குமாரை உடனே பதவி நீக்கம் செய்க!

கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் வலியுறுத்தல்!

சென்னை, அக்.30 -

"தேனியில் சிறைக்கைதி கள் தப்பியதற்கு அரசின் அலட்சியமே காரணம்! எனவே உடனியாக சம்பந்தப்பட்ட சட்டத்துறை அமைச்சர் நிர்மல் குமாரை பதவி நீக்கம் செய்க" என கழக சட்டத் துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் வலியுறுத்தி யுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சிறையில் இருந்து மொத்தமாக கைதிகள் தப்பித்து ஓடும் சம்பவம் 31 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ் நாட்டில் நடந்திருக்கிறது. ஒரு தலைமுறையே மறந்து போன நிகழ்வு, த.வெ.க. ஆட்சியில் அரங் கேறியிருக்கிறது. தேனி தேக்கம் பட்டி கிளைச் சிறையிலிருந்து 17 விசாரணைக் கைதிகள் தப்பியோ டியிருக்கிறார்கள். சிறைத்துறை யின் கடுமையான பாதுகாப்புக் குறைபாட்டை யும், நிர்வாக அலட்சி யத்தையும் வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது இந்த சம்பவம்.

'வலிப்பு நோய்' நாடகம் ஆடி சிறைக் காவலர்களை இரும்புத் தடி களால் கொடூரமாகத் தாக்கி, சிறைச் சாவிகளைப் பறித்துக் கொண்டு முதன்மை நுழைவு வாயில் வழியாகவே கைதிகள் தப்பிச் சென்றிருக்கிறார்கள். முதன்மை வாசல் வழியாகவே 17 கைதிகளும் ஒரே நேரத்தில் தப்பி சென்றிருப்பது சிறைத் துறை வர லாற்றிலேயே நடக்காத ஒன்று!

அரசு சார்பற்ற விரிவான அறிக்கை அவசியம்!

கைதிகளின் நாடகத்தை முன் கூட் டியே கணிக்கத் தவறியது, அவசரக் காலப் பாதுகாப்பு நெறிமு றைகளைப் பின்பற்றாதது என்ப தெல்லாம் அப்பட்டமான மனிதத் தவறுகள்தான். பாதுகாப்புப் பணி யில் அலட்சியமாக இருந்த 9 சிறைக் காவலர்கள் மற்றும் அதிகா ரிகள் பணியிடை நீக்கம் செய்யப் பட்டுள்ளனர். உயர் மட்ட அளவில் பொறுப்பு வகிக்கும் அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறை ஊழியர்களில் எவரே னும் கைதிகளுக்கு உடந்தையாக இருந்தார்களா? லஞ்சம் மற்றும் கூட்டுச் சதி ஏதேனும் பின்னணியில் உள்ளதா? என்பதை எல்லாம் விரி வான விசார ணைக்கு உட்படுத்தி னால்தான், உண்மை கள் வெளிவ ரும். வெறும் கீழ்மட்ட ஊழியர்கள் பணியிடை நீக்கம் மட்டும்தான் நட வடிக்கையா? குற்றவியல் நடவடிக் கைக்கு அரசு சார்பற்ற விரிவான விசாரணை அவசியம்.



உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணை ஆணையம்!

தப்பியோடிய கைதிகளைப் பிடிக்க 17 தனிப்படைகள் அமைக் கப்பட்டிருக்கிறது. 13 கைதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். தப்பி ஓடிய மாற்றுத்திறனாளி கைதியை ஒரு ஆட்டோ டிரைவரே பிடித்துக் கொடுத்திருக்கிறார். யார் கண்டுபி டித்து கொடுத்தார்கள் என்பதில் முரண்பாடுகள் நிலவு கிறது. இதை யெல்லாம் கண்டறிய விசாரணைக் கமிஷன் அவசியம்.

புழல் சிறையில் இரண்டு கைதி கள் தப்பியோடிய சம்பவம் நடந்து ஒரு வாரத்திற்குள்ளேயே தேனி சம்பவம் நடந்திருக்கிறது. அடுத்த டுத்து இப்படி சம்பவம் நடப்பதற்கு பின்னணி என்ன? என்பதை வெளிப்படையாக மக்களுக்கு தெரி விக்க சென்னை உயர் நீதிமன்ற த்தின் தற்போதைய நீதிபதி ஒருவர் தலைமையில் விசாரணை ஆணையம் அமைத்தால்தான் மொத்த உண்மைகளும் வெளிவ ரும். இந்த விசாரணைக் கமிஷன் தேனி சம்பவத்திற்காக மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு சிறைக ளின் பாதுகாப்பை பலப்படுத்த அவசி யமாகும்.

சிறைச்சாலைகள் குற்ற வாளி களைப் பாதுகாக்கும் இரும்பு அரண்கள். அங்கே எந்தவொரு சிறு அலட்சியமும், கவனச்சிதற லும் ஒட்டுமொத்த மாநிலத்தின் சட டம் – ஒழுங்கிற்கு அச்சுறுத்தலாக மாறிவிடும். தற்காலத் தொழில்நுட பம், செயற்கை நுண்ணறிவு மற் றும் சர்வதேசச் சிறை பாதுகாப்பு நெறிமுறைகளின் அடிப்படையில் சிறைத்துறை யில் முக்கியச் சீர்தி ருத்தங்கள் உருவாக்க வேண்டும். இனிவரும் காலங்களில் சிறைக் கைதிகள் தப்பித்து ஓடும் நிகழ்வுகள் நடக்காமல் இருக்க விசாரணை ஆணையத்தின் மூலம் புதிய கட்டுப்பாட்டு விதி முறை (SOP) உருவாக்கப்பட வேண்டும்.

நிர்வாகத்தில் சோடைபோன அமைச்சர் நிர்மல் குமார்!

தேனி சிறையில் காவலர்கள் பற்றாக்குறை இருக்கிறது. கூடுதல் பணியாளர்களை நியமிக்க வேண் டும் என அரசுக்கு கடிதங்கள் மூலம் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அதனை அரசு அலட்சியம் செய்தி ருப்பதுதான் தேனி சம்பவம் நடப்ப தற்கு காரணம். இதனையெல்லாம் கண்டறிய, பணியில் இருக்கும் நீதி பதியை கொண்டு விசாரித்தால்தான் உண்மை தெரியும்.

மின்சாரம், சட்டம், சிறை, ஊழல் தடுப்பு என நிறைய துறை களை கையில் வைத்திருக்கும் அமைச்சர் நிர்மல் குமார் தன்னு டைய எல்லா துறையிலும் சோடை போயிருக்கிறார். மின்வெட்டு, அதிக விலைக்கு மின்சாரம் கொள் முதல், அரசு வழக்கறிஞர்கள் நியம னத்திற்கு லஞ்சம், ஆட்சிக்கு வந்து 50 கைதிகள் சிறைகளில் இருந்து தப்பித்தல் என நிர்மல்குமாரின் துறைகள் மோச மாக செயல்பட்டிருக் கின்றன. இந்த நிர்மல்குமாரை உடனடியாக அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும்.

இவ்வாறு கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தா மன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(28.10.2026)




1. சென்னை ஓட்டேரி இரட்டைமலை சீனிவாசன் தெருவில் குடிபோதையில் ஏற்பட்ட தகராறில் முதியவர் அடித்துக் கொலை.

2. திருப்பத்தூர் அருகே கந்திலியில் முன் விரோதம் காரணமாக முதியவர் இரும்புக் கம்பியால் அடித்து படுகொலை.

3. கிருஷ்ணகிரி மாவட்டம் காடியா பாளையம் அருகே பழைய வாகன வியாபாரி படுகாயங்களுடன் சடலமாக மீட்பு!

4. ஆவடி அடுத்த திருமுல்லைவாயிலில் குடிபோதையில் ஏற்பட்ட தகராறில் ரவுடி வெட்டிக்கொலை.



5. கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே 16 வயது சிறுமிக்குப் பாலியல் தொல்லை கொடுத்த டிபன் கடை உரிமையாளர் சிக்கினான்.

6. விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூர் அருகே தென்மங்கலம் கிராமத்தில் பள்ளிக்குச் சென்ற 11 வயது சிறுமியை கடத்த முயன்ற வாலிபர் சிக்கினான்.

7. சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே மல்லி கரையில் 14 வயது சிறுமிக்குப் பாலியல் தொல்லை கொடுத்த ஆட்டோ டிரைவர் , போலீசில் புகார் அளித்ததால் பயந்து தற்கொலை.



8. நெல்லை மாவட்டம், இட்டா மொழியில் இன்ஸ்டாவில் இளம் பெண்ணுக்குத் தொல்லை கொடுத்த வாலிபருக்கு சரமாரியாக அறிவாள் வெட்டு.

9. மதுரை சமயநல்லூர் அருகே தேனூரில் மருதுபாண்டியர் குரு பூஜையில் ஏற்பட்ட தகராறில் வாலிபர் காது துண்டானது.

10. தூத்துக்குடி கந்தன் காலனி பகுதியில் பட்டப் பகலில் தனியாக வசித்து வந்த பெண்ணை சரமாரியாக வெட்டி நகை கொள்ளை.

11. சென்னை வடபழனி தனியார் மருத்துவமனையில் வேலை செய்யும் தூய்மைப் பணியாளர் வீட்டு பீரோவை உடைத்து 25 சவரன் நகை கொள்ளை.



12. சென்னை பெரியமேடு ரயில்வே குடியிருப்பில் அடுத்தடுத்து ஐந்து வீடுகளில் கொள்ளை. பணம் நகை மற்றும் மோட்டார் சைக்கிள்கள் திருட்டு.

13. சேலம் ஆட்டையாம்பட்டி காவல் நிலையத்தில் கொலை மற்றும் அடிதடி வழக்குகளில் தொடர்புடைய இரண்டு சரித்திரப் பதிவேடு குற்றவாளிகள் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த அழைத்துச் சென்ற போது தப்பி ஓட்டம்.

14. சேலம் மகாத்மா காந்தி விளையாட்டு மைதானத்தில் மாநில அளவிலான தடகள விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சியில் தேசியக் கொடியை தலைகீழாக ஏற்றிய போக்குவரத்துத் துறை அமைச்சர் பார்த்திபன்.

15. கடலூர் மாவட்டம் வேடப்பர் கோவில் அருகே முப்பதாயிரம் ரூபாய் மதிப்புள்ள போதை மாத்திரைகள் ஆயிரக்கணக்கில் சிக்கின.

16. ராணிப்பேட்டையில் ஒரு வயது பெண் குழந்தை கடத்தல் த.வெ.க. நிர்வாகியான கார் ஓட்டுநர் உட்பட 5 பேர் கைது! குழந்தையை கடத்தி ஆந்திராவில் விற்பனை செய்த த.வெ.க. நிர்வாகி

லாலாப்பேட்டையைச் சேர்ந்த சேகர் பிரேமா தம்பதியின் ஒரு வயது பெண் குழந்தை மகேஸ்வரி கடத்தல்

கடந்த 23ம் தேதி இரவு தம்பதி சாலையோரம் உறங்கிக் கொண்டிருந்தபோது குழந்தை மாயம்.

தாய் பிரேமா அளித்த புகாரின் பேரில், சிப்காட் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை.

த.வெ.க.அரசைக் கண்டித்து விழுப்புரத்தில்

தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் – முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் அறிக்கை!

செஞ்சி, அக். 30–


த.வெ.க.அரசைக் கண்டித்து விழுப்புரத்தில் திமுக மகளிர் அணி சார்பில் நாளைமாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறு கிறது இதில்விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக மகளிர் அணி, மக ளிர் தொண்டரணியினர் திரளாக பங்கேற்க வேண்டும் என விழுப்பு ரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ் தான் வேண் டுகோள் விடுத்துள்ளார் .

இதுகுறித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தனது அறிக்கையில்கூறுகையில்:

தமிழகத்தில் கொலை, கொள்ளை, போதைப் பொருள் விற்பனை ஆகியவை அதிகரித்து சட்டம் ஒழுங்கு பெரியளவில் சீர் கெட்டு இருப்பதோடு, குழந்தைகள், பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகள் கடத்தல் ஆகியவை மிகப்பெரிய அளவில் அதிகரித்து தமிழகத்தை பாதுகாப் பற்ற மாநிலமாக ஆக்கி உள்ளது.

இதுபோன்ற குற்றச் செயல்க ளில் ஆளும்

த. வெ.க.வினரே பெரிய அள வில் ஈடுபட்டிருப்பதாக செய்திகள் வெளிவருகின்றன. இந்த அரசு சட் டம் ஒழுங்கை பாதுகாக்கத் தவறிய தோடு, பெண்கள் மற்றும் குழந் தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கும், சிறைச்சாலை கைதிகள் தப்பி ஓடுவதை தடுக்க வும், விலைவாசி உயர்வை கட்டுப்



படுத்தவும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.த. வெ . க அரசே ஆவின்பால் மற்றும் ஆவின் உப பொருட்களின் விலையை உயர்த்துகிறது.ஒரு பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழ கத்தை படுகுழியில்தள்ளி உள்ள தமிழக வெற்றி கழக அரசை கண் டித்து திமுக மகளிர் அணி சார்பில் நாளை 31. 10 .2026 சனிக்கி ழமை காலை 10 மணி அளவில் அனைத்து மாவட்ட தலைநகரங்க ளிலும் மாபெரும் கண்டன ஆர்ப் பாட்டம் நடைபெறும் என கழக தலைவர் மு .க .ஸ்டாலின் அவர் கள் அறிவித்துள்ளார்.

இந்நிலையில் திமுக தலை மைக் கழக ஆணைக்கிணங்க த. வெ.க.அரசை கண்டித்து விழுப் புரம் வடக்கு மாவட்ட திமுக மகளிர் அணி சார்பில் நாளை 31ஆம் தேதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

நாளை நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள் வது "நமது உரிமை நமது கடமை "என்ற லட்சிய உணர்வோடு விழுப் புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள செஞ்சி, மயிலம்,திண்டிவனம் தொகுதிக்கு உட்பட்ட மாநில, மாவட்ட ,ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் ,அனைத்து அணி அமைப்பாளர்கள், அனைத் துஅணிகளின் பொறுப்புகளில் உள்ள மகளிர்கள்,கழக மூத்த நிர் வாகிகள், முன்னாள் ஒன்றிய குழு பெருந்தலைவர்கள், துணை பெரும் தலைவர்கள் , மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள், ஒன் றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும்உள் ளாட்சி மன்ற பிரதிநிதிகள்என ஒட்டு மொத்த கழகத்தினரும் ஆயி ரம் கணக்கில் அலைகட என திரண்டு வந்துகண்டன ஆர்ப்பாட் டத்தில் பங்கேற்க வேண்டும்.

இவ்வாறு கேட்டுக்கொள்ளப் படுவதாக விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தனது அறிக்கை யில் தெரிவித்துள்ளார்.

மாற்றுத்திறனாளிகளுக்கான கட்டணமில்லாப் பேருந்துப் பயணச் சலுகை எல்.எஸ்.எஸ்., எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட பேருந்துகளுக்கு விரிவாக்கம்!

வெற்றியை கழகத் தலைவரின் கரங்களில் சமர்ப்பிக்கிறோம்!

தி.மு.க. மாற்றுத்திறனாளிகள் அணியின் செயலாளர் பேராசிரியர் டி.எம்.என். தீபக் அறிக்கை!

சென்னை, அக். 30–

தி.மு.க. மாற்றுத் திறனாளிகள் அணியின் செயலாளர் பேராசிரியர் டி. எம். என். தீபக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

ஒருவழியாக, மாற்றுத்திறனாளி கள் சாலைக்கு வந்து போராடி, தங்க ளது உரிமைக்காகக் குரல் எழுப்பி, கண்டனங்களைத் தெரிவித்து, பல் வேறு இன்னல்களையும் வேதனை களையும் தாங்கிப் போராடியதன் விளைவாக, மாற்றுத்திறனாளிக ளுக்கான கட்டணமில்லாப் பேருந் துப் பயணச் சலுகையை எல்.எஸ். எஸ்., எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட பேருந் துகளுக்கும் விரிவுபடுத்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இது திராவிட முன்னேற்றக் கழ கத்தின் மாற்றுத்திறனாளிகள் அணிக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும்.

இத்திட்டம் அறிவிக்கப்பட்ட நாள் முதல், அது முறைப்படி நடைமு றைக்கு வந்த காலகட்டம் வரையி லும், மாற்றுத்திறனாளிகளுக்கான பேருந்துப் பயணச் சலுகையை விரி வுபடுத்த வேண்டும் என்ற கோரிக் கையைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தோம்.

இந்தக் கோரிக்கையை மக்கள்



மத்தியில் கொண்டு செல்வதற்காக முரசொலி நாளிதழில் கட்டுரைகளை வெளியிட்டோம். பத்திரிகைச் செய் திகள், நேர்காணல்கள் மற்றும் பல் வேறு அரசியல் நடவடிக்கைகள் வாயிலாக மாற்றுத்திறனாளிகளின் நியாயமான கோரிக்கையைத் தொடர்ந்து முன்னெடுத்தோம்.

தொடர்ச்சியான இந்த முயற்சி களுக்குப் பிறகே தற்போது இந்த அரசாணை வெளியாகியுள்ளது. மாற்றுத்திறனாளிகளின் உரிமைக் காகத் தொடர்ந்து குரல் கொடுத்து, அவர்களின் கோரிக்கையை அரசி யல் தளத்தில் முன்னெடுத்துச் சென்ற திமுக மாற்றுத்திறனாளிகள் அணியின் செயல்பாட்டிற்குக் கிடைத்த வெற்றியாகவே இதைக் கருதுகிறோம்.

மாற்றுத்திறனாளிகளின் போக் குவரத்து உரிமை என்பது வெறும் கட்டணச் சலுகை தொடர்பான கோரிக்கை மட்டுமல்ல. அது அவர்க ளின் கல்வி, வேலைவாய்ப்பு, மருத் துவம், சமூகப் பங்கேற்பு மற்றும் சுதந்திரமான வாழ்க்கை ஆகியவற் றுடன் தொடர்புடைய முக்கியமான உரிமையாகும்.

இந்தக் கோரிக்கையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதி லும், மாற்றுத்திறனாளிகளின் குரலை உரிய அரசியல் தளங்களில் ஒலிக்கச் செய்வதிலும் திமுக மாற் றுத்திறனாளிகள் அணி உறுதியுடன் செயல்பட்டு வருகிறது.


இந்த வெற்றியைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவ ரான ஐயா மு.க. ஸ்டாலின் அவர்க ளுக்குச் சமர்ப்பிப்பதில் பெருமை கொள்கிறோம்.

திமுக மாற்றுத்திறனாளிகள் அணியின் செயலாளர் என்ற முறை யில், இந்த வெற்றியை எங்களது கழகத் தலைவர் ஐயா மு.க. ஸ்டாலின் அவர்களின் பொற்பாதங் களில் பெருமையுடனும் நன்றியுட னும் சமர்ப்பிக்கிறேன்.

மாற்றுத்திறனாளிகளின் உரி மைகளுக்காக எங்களது குரல் தொடர்ந்து ஒலிக்கும். அவர்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேறுவதற்கான எங்களது அர சியல் பயணமும் உரிமைப் போராட் டமும் தொடர்ந்து நடைபெறும்.

இவ்வாறு அவர் தெரிவித் துள்ளார்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; ஆவடி மாநகராட்சி கூட்டத்தில் அடிக்கடி கரண்டு ஆப் ஆன போது, அங்கிருந்த கவுன்சிலர் கள் எல்லாம் விசில் அடித்தார்களாமே!

போண்டி : ஆமாய்யா; ஒரே விசில் சப்தம்தானாம். மின்வெட்டுன்னா உடனே ஞாபகம் வர்றது த.வெ.க.தானே! 'கலெக்ஷன் குமார் தானே! அதான் அவங்க கட்சிச் சின்னமான விசிலை ஊதியிருக்காங்க. நிலைமை எப்படிப் போகுது பார்த்தியா.

முன்னாள் எம்.எல்.ஏ. எம்.முத்துராமலிங்கம் சகோதரர்

எம்.பாண்டி மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 30–


திருமங்கலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.முத்துராமலிங்கத்தின் சகோதரர் எம்.பாண்டி அவர்கள் 28.10.2026 அன்று இயற்கை எய்தினார், என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைவு செய்தி அறிந்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை, அன்னாரது குடும்பத்தினருக்குத் தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வெ. சுந்தராஜன்

அக்டோபர் 30 (2021)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு சென்னை இராதாகிருஷ்ணன் நகர் பகுதியில் பிரதிநிதி, பொருளாளர், அவைத்தலைவர் எனவும், தொடர்ந்து பகுதிச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

வடசென்னை கூட்டுறவு சங்கத் துணைத் தலைவராகப் பொறுப்பு வகித்தவர்.

இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப்போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

கழகத் தலைவர் அவர்கள், "களத்தில் பம்பரமாய்ச் சுழன்று பணியாற்றும் நல்லதொரு தளகர்த்தரை கழகம் இழந்திருக்கிறது" என தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.